**பள்ளிக் கல்வி இயக்ககம் – ஈரோடு மாவட்டம்**

**மாதிரி அடைவுத் தேர்வு – 2021-2022**

**வகுப்பு : 8** **காலம் : 2 ½ மணி நேரம்**

**குறிப்புரைகள்**

1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

2) ஒவ்வொரு கேள்விகளுக்கும் கொடுக்கப்பட்ட குறிப்புரைகளை கடைபிடிக்க.

3) கொடுக்கப்பட்ட 4 விடைகளில் சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

ERODE DISTRICT

1. “ஓணம்” பண்டிகை எந்த மாநிலத்தில் கொண்டாடப்படுகிறது.

அ) தமிழ்நாடு    ஆ) கேரளா    இ) ஆந்திர பிரதேசம்    ஈ) கர்நாடகா

2. பொருத்துக.

அ) நேச்சர் – பழுது

ஆ) மார்னிங் – உடன் பிறந்தார்

இ) டுமாரோ – காலை

ஈ) சிஸ்டர் – நாளை

உ) ரிப்பேர் – இயற்கை

அ) 3 1 2 5 4    ஆ) 5 3 4 2 1    இ) 1 2 4 3 5    ஈ) 2 4 5 3 1

3. ஆற்றின் ஓரம் __________ ஆடையில் இருப்பது __________.

அ) கரை, கறை    ஆ) கறை, கரை    இ) கறை, கறை    ஈ) கரை, கரை

4. ஈரோடு __________ மாநகரம்

அ) மஞ்சள்    ஆ) கரும்பு    இ) அல்வா    ஈ) மாம்பழம்

5. <u>**பொருத்தமான சொற்களை அமைத்தல் :**</u>

| இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| 1. __________ | வருகிறார் | 2. __________ |

அ) வந்து, வந்தார்    ஆ) வந்தார், வருவார்    இ) வருவார், வந்தார்    ஈ) வந்தேன், வருவேன்

6. நிரப்புக :

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| மாணவன் | 1. __________ |
| 2. __________ | பாடகி |

அ) மாணவர், நடிகை    ஆ) மாணவி, பாடகர்    இ) பாடகர், மாணவி    ஈ) மாணவர்கள், பாடகி

ERODE DISTRICT

**பின்வரும் உரைநடை பகுதியை படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

*தமிழர்களின் வீர விளையாட்டுகளுள் ஒன்று சிலம்பம். சிலம்பு என்றால் ஒலித்தல் என்பது பொருள். கம்பு சுழற்றும் போது ஏற்படும் ஓசையை அடிப்படையாகக் கொண்டே சிலம்பம் எனப் பெயரிட்டனர். கம்பு சுழற்றுதல் என்னும் பெயரும் இதற்கு உண்டு.*

7. தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்று ____________.

அ) ஏறுதழுவுதல் ஆ) சிலம்பம் இ) கபடி ஈ) கால்பந்து

8. எதனை அடிப்படையாகக் கொண்டு சிலம்பம் என பெயரிட்டனர்.

அ) சுழற்றுதல் ஆ) சுற்றுதல் இ) ஓசை ஈ) ஒளித்தல்

9. சில்பம் என்ற சொல்லின் வேறு பெயர் என்ன ?

அ) தடி அடித்தல் ஆ) வீசுதல் இ) குத்துத்தல் ஈ) கம்பு சுழற்றுதல்

10. இதற்கு இணையான தலைப்பு ஒன்று கெடு.

அ) வீர விளையாட்டு ஆ) தமிழர் விளையாட்டு இ) இந்திய விளையாட்டு ஈ) சிலம்பம்

11. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கோழி – கொய்
2. பால் – நிரை
3. சோறு – கொக்கரிக்கும்
4. பூ – பருகு
5. ஆ – உண்

அ) 3 4 2 1 5 ஆ) 3 4 5 1 2 இ) 4 5 3 2 1 ஈ) 4 5 1 2 3

12. அகரவரிசைப்படி எது சரியான முறையில் உள்ளது ?

அ) அகவை, ஈகை, உலகம், ஔவையார்

ஆ) ஈகை, உலகம், அகவை, ஔவையார்

இ) அகவை, உலகம், ஈகை, ஔவையார்

ஈ) ஔவையார், உலகம், ஈகை, அகவை

ERODE DISTRICT

13. எங்கள் ஊரில் ______________ என வளர்ந்த பனைமரம் உள்ளது.

அ) மட மட  ஆ) சட சட  இ) நெடு நெடு  ஈ) கம கம

14. விரிச்சொல் – முக்கனி

அ) கொய்யா, மா, பலா  ஆ) மா, பலா, வாழை

இ) வாழை, மா, மாதுளை  ஈ) பலா, கொய்யா, வாழை

15. நிறுத்தக்குறிகளைப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| காற்புள்ளி | – | (1) . |
| வினாக்குறி | – | (2) , |
| உணர்ச்சிக்குறி | – | (3) ? |
| அரைப்புள்ளி | – | (4) ! |
| முற்றுப்புள்ளி | – | (5) ; |

அ) 3 4 5 2 1  ஆ) 2 3 4 5 1  இ) 2 3 4 1 5  ஈ) 4 5 3 2 1

16. $\frac{25}{100}$ ன் எளிய வடிவம்

அ) $\frac{35}{20}$  ஆ) $\frac{45}{20}$  இ) $\frac{35}{10}$  ஈ) $\frac{55}{20}$

17. எது பெரியது ? $\frac{3}{5}$ , $\frac{8}{6}$ , $\frac{1}{2}$ , $\frac{2}{3}$

அ) $\frac{8}{6}$  ஆ) $\frac{3}{5}$  இ) $\frac{1}{2}$  ஈ) $\frac{2}{3}$

18. பின்னங்களைக்கூட்டவும் $\frac{1}{2} + \frac{3}{4}$

அ) $\frac{1}{4}$  ஆ) $\frac{3}{4}$  இ) $\frac{5}{4}$  ஈ) $\frac{7}{4}$

19. 43 ன் கனத்திலுள்ள ஒன்றுகளின் இலக்கம் -------- ஆகும்.

அ) 9  ஆ ) 6  இ ) 7  ஈ) 3

ERODE DISTRICT

20. சரியான குறியீடு இடுக 68.56 ☐ 68.57

அ) < ஆ) > இ) = ஈ) ‡

21. ஒழுங்கு பலகோணத்திற்கு எ.கா ------ ஆகும்.

அ) செவ்வகம் ஆ) சதுரம் இ) அசமபக்க முக்கோணம் ஈ) நாற்கரம்

22. $\frac{5P}{6} = 10$ என்ற சமன்பாட்டின் P ன் மதிப்பு ---------------- ஆகும்.

அ) 12 ஆ) 10 இ) 5 ஈ) 15

23. இரண்டு எண்களின் மீ.சி.ம மற்றும் மீ.பொ.கா ஆகியவற்றின் பெருக்குத்தொகை 120 ஆகும். அவற்றுள் ஓர் எண் 8 எனில் மற்றோர் எண் ------ ஆகும்.

அ) 15 ஆ) 10 இ) 18 ஈ) 12

24. ஆண்டிற்கு 5 % வட்டி வீதத்தில் ஒரு ஆண்டிற்கு ரூ.700 ஐத் தனி வட்டியாகத்தரும் அசல் எவ்வளவு ?

அ) 14000 ஆ) 10000 இ) 7000 ஈ) 8000

25. ஒரு பள்ளியில் உள்ள 2000 மாணவர்களில் 500 பேர் மாணவிகள். பள்ளியிலுள்ள மாணவர்களின் ச தவீதம் --- ஆகும்.

அ) 65% ஆ) 55% இ) 75 % ஈ) 85%

26. A என்பவர் ஒரு வேலையை 6 நாட்களிலும் B என்பவர் ஒரு வேலையை 3 நாட்களிலும் முடிப்பர். எனில் இருவரும் ஒன்றாக சேர்ந்து அந்த வேலையை ---- நாட்களில் முடிப்பர்.

அ) 5 ஆ) 4 இ) 6 ஈ) 2

27. ரூபாய் 5000 ஐ குறித்த விலையாககொண்ட ஒரு அரவை இயந்திரமானது தள்ளுபடிக்கு பின் ரூ. 4000/- க்கு விற்கப்பட்டது. தள்ளுபடி சதவீதம் ---- ஆகும்.

அ) 10 % ஆ) 20% இ) 30% ஈ) 15%

ERODE DISTRICT

28. 17 அடி நீளமுள்ள ஏணி, தரையிலிருந்து 15 அடி உயரத்தில் சுவரினைத் தொடுமாறு சாய்த்து வைக்கப்பட்டுள்ளது எனில், சுவரிலிருந்து ஏணியின் அடிப்பகுதியானது எவ்வளவு துாரத்தில் உள்ளது ?

அ ) 18　　ஆ) 6　　இ) 8　　ஈ ) 12

29. 15, 20, 25, 15, 30, 35, 40, 45, 50 ன் முகடு -------

அ ) 15　　ஆ) 30　　இ) 40　　ஈ) 50

30. பள்ளிகளுக்கிடையிலான வினாடி வினா போட்டிக்கு பள்ளியின் சார்பாக ஒருவரைத் தேர்ந்தெடுக்க 36 மாணவர்கள் மற்றும் 25 மாணவிகளுக்கு ஆசிரியர் பயிற்சியளிக்கிறார் எனில் இவர்களிலிருந்து ஒருவரை ஆசிரியர் தேர்ந்தெடுக்க எத்தனை விதமான வாய்ப்புகள் உள்ளது ?

அ ) 41　　ஆ) 31　　இ) 61　　ஈ) 51

31. ராணி தனது தாய், அரிசி வைக்கப்பட்டுள்ள இரும்பு பாத்திரத்தில் வேப்பிலைகளை போட்டுவைப்பதை பார்த்தாள். அரிசி பாத்திரத்தில் இரும்பு பாத்திரம் வைப்பதற்கான காரணம் என்ன ?

அ) பறவைகளிடமிருந்து பாதுகாக்க.

ஆ) விலங்குகளிடமிருந்து பாதுகாக்க.

இ) நுண்ணுயிரிகள் மற்றும் பூச்சிகளிடமிருந்து பாதுகாக்க.

ஈ) களைகளிடமிருந்து பாதுகாக்க.

32. கீழே கொடுக்கப்பட்டவற்றில் பால் இனப்பெருக்கத்திற்கு பயன்படக்கூடியவை

அ) சூலகம்　　ஆ) மகரந்தம்　　இ) மொட்டு　　ஈ) கிளைகள்

(i) அ மற்றும் இ　　(ii) அ மற்றும் ஆ

(iii) இ மற்றும் ஈ　　(iv) ஈ மற்றும் அ

33. மக்கும் தன்மை உடைய பொருட்களை கண்டறிக.

அ) காய்கறி தோல், மரம்　　ஆ) அலுமினிய குவளை

இ) நெகிழி, தாள்கள்　　ஈ) தெர்மகோல், கம்பளி துணிகள்

ERODE DISTRICT

34. சுத்தியால் அடிக்கும்போது அலோகங்கள் துண்டுகளாக உடையும் தன்மை உடையதை அனிதா அறிவார். கீழ்க்காண்பவை எவை அலோகம் ?

அ) இரும்பு ஆணி ஆ) தாமிர தட்டு

இ) அலுமினிய கம்பி ஈ) நிலக்கரி துண்டு

35. எதிர்கால சந்ததியினருக்கு பசுமை செல்வத்தை தக்கவைக்க வேண்டுமென்றால் நாம் என்ன செய்ய வேண்டும் ?

அ) மரங்களை வெட்டுதல் ஆ) காடுகளை விவசாயத்திற்கு பயன்படுத்துதல்

இ) அதிக மரங்களை நடுதல் ஈ) எதுவுமில்லை.

36. ஒளியானது பல்வேறு நிறங்களாகப்பிரிவதற்கு காரணம்

அ) ஒளி எதிரொலித்தல் ஆ) ஒளி விலகல்

இ) ஒளியின் நிறப்பிரிகை ஈ) ஒளி உட்கவருதல்

37. சரியான இணையைத் தேர்ந்தெடுக்க

அ) அமீபா – பாக்டீரியா

ஆ) பாரமீசியம்– புரோட்டோசோவா

இ) லேக்டோபேசில்லஸ் – பூஞ்சைகள்

ஈ) அஸ்பர் ஜில்லஸ் – பாசிகள்

38. கீழ்க்காணும் படத்தில் **'r '** கோணம் குறிப்பிடுவது எது ?




அ) படுகோணம் ஆ) விலகு கோணம்

இ) குத்துக்கோடு ஈ) சமதள ஆடி

ADE DISTRICT

39. பச்சையத்தோடு தொடர்புடையது எது ?

அ) நுண்குமிழ் ஆ) சைட்டோபிளாசம்

இ) குளோரோபிளாஸ்டு ஈ) உட்கரு

40. மேகங்களில் அதிக அளவு மின்னூட்டங்கள் சேர்வதால் ஏற்படுவது எது ?

அ) புயல் ஆ) மின்னல் இ) நில நடுக்கம் ஈ) மழை

41. சரியான கூற்று எது ?

அ) காந்தத்தின் வட துருவம் – மற்றொரு காந்தத்தின் வட துருவத்தை ஈர்க்கும்.

ஆ) காந்தத்தின் வடதுருவம் மற்றொரு காந்தத்தின் தென்துருவத்தை ஈர்க்கும்.

இ) காந்தத்தின் வட துருவம் மற்றொரு காந்தத்தின் தென் துருவத்தை விலக்கும்.

ஈ) காந்தத்தின் தென் துருவம் மற்றொரு காந்தத்தின் தென் துருவத்தை ஈர்க்கும்.

42. இரும்பு எந்த நிலையில் துருபிடிக்கும் ?

அ) இரும்பாலான வாயிற்கதவு வளிமண்டலத்தில் இருக்கும்போது

ஆ) இரும்பிலான பொருட்கள் காற்று மட்டும் படும்போது

இ) கிரீஸ் தடவப்பட்ட இரும்பு ஆணி

ஈ) மின்முலாம் பூசப்பட்ட இரும்புத்தகடுகள்

43. சில நுண்ணுயிரிகள் ஒரு குறிப்பட்ட பொருட்களை உருவாக்குகின்றன. அவை வேறு நுண்ணுயிரிகளை கொல்லுகின்றன இந்த பொருளானது.

அ) எதிர் உயிரிகள் ஆ) நச்சுகள்

இ) நோய்த்தடுப்பு மருந்துகள் ஈ) நோய் எதிர்ப்பான்கள்

44. மின்சாதனப்பொருட்களை ஈரக்கையால் தொடக்கூடாது ஏன் ?

அ) நீர் ஓர் அரிதிற்கடத்தி

ஆ) நீர் ஒரு சிறந்த மின்கடத்தி

இ) ஈரக்கையில் பொருள் நழுவக்கூடியது

ஈ) மின் சாதன கருவிகள் செயல்படாமல் போகலாம்.

ERODE DISTRICT

45. கதவு இணைப்புகளில் எண்ணையை விடுவதால், உராய்வு -----

அ) அதிகரிக்கும் ஆ) குறையும் இ) மறைந்து விடும் ஈ) மாற்றமில்லை.

46. பனியாறுகள் இல்லாத கண்டம்

அ) வட அமெரிக்கா ஆ) தென் அமெரிக்கா

இ) ஆஸ்திரேலியா ஈ) ஆப்பிரிக்கா

47. " ஆசியாவின் டெட்ராய்ட்" என அழைக்கப்படும் நகரம்

அ) சென்னை ஆ) டெல்லி இ) மும்பை ஈ) கொல்கத்தா

48. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆரல்வாய்மொழி என்னும் பகுதியில் உலகின் மிகப் பெரிய ___________ உள்ளது.

அ) அணு சக்தி நிலையம் ஆ) காற்றாலை நிலையம்

இ) நீர் மின் நிலையம் ஈ) அனல் மின் நிலையம்

49. பொருத்துக.

a) மேற்கு தொடர்ச்சி மலையின் மிக உயர்ந்த சிகரம் – i) எவரெஸ்ட்

b) உலகின் மிக உயர்ந்த சிகரம் – ii) தொட்டபெட்டா

c) தென்னிந்தியாவில் மிக உயர்ந்த சிகரம் – iii) காட்வின் ஆஸ்டின்

d) இந்தியாவில் மிக உயர்ந்த சிகரம் – iv) ஆனைமுடி

அ) (a) – (iv), (b) – (i), (c) – (ii), (d) – (iii)

ஆ) (a) – (i), (b) – (ii), (c) – (iii), (d) – (iv)

இ) (a) – (ii), (b) – (iii), (c) – (iv), (d) – (i)

ஈ) (a) – (iii), (b) – (iv), (c) – (i), (d) – (ii)

50. GST – வரி விதிப்பிற்குள் வராத பொருளின் பெயரைக் கூறுக.

அ) ஒப்பனைப் பொருட்கள் ஆ) உணவுப் பொருட்கள்

இ) மருந்துகள் ஈ) பெட்ரோல்

ERODE DISTRICT

51. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

அ) பொட்டாஷ் ஆ) நைட்ரேட் இ) மைக்கா ஈ) ஹமடைட்

52. மரங்களை வெட்டுவதினால் ஏற்படும் பாதிப்புகள்

அ) வெள்ளப்பெருக்கு ஆ) வறட்சி இ) நிலநடுக்கம் ஈ) புயல்

53. " விழு ! மூடிக்கொள் ! பிடித்துக்கொள் !" – என்பது எதன் தயார் நிலை

அ) நிலநடுக்கம் ஆ) கலவரம் இ) சுனாமி ஈ) தீ விபத்து

54. இந்தியாவின் எந்த அரசின் தலைவராக ஆளுநர் இருப்பார் ?

அ) மத்திய அரசு ஆ) மாநில அரசு இ) யூனியன் பிரதேசம் ஈ) உள்ளாட்சி அமைப்பு

55. நிர்வாசன் சதன் – என்பது கீழ்க்கண்ட வகைகளில் எதனைக் குறிப்பிடுகிறது ?

அ) இந்திய பாராளுமன்றம் ஆ) இந்திய தேர்தல் ஆணையம்

இ) உச்ச நீதிமன்றம் ஈ) உயர் நீதிமன்றம்

56. இந்திய வரைபடத்தில் ABCD – குறிக்கும் நகரங்களை வரிசைப்படுத்தவும்.




1. டெல்லி, கொல்கத்தா, சென்னை, மும்பை

2. கொல்கத்தா, சென்னை, டெல்லி, மும்பை

3. மும்பை, கொல்கத்தா, சென்னை, டெல்லி

4. சென்னை, டெல்லி, மும்பை, கொல்கத்தா

57. மூன்று பக்கங்களும் அண்டை நாடான பங்காளதேஷால் சூழப்பட்ட இந்திய மாநிலம் எது ?

அ) மணிப்பூர் ஆ) நாகலாந்து இ) மிசோரம் ஈ) திரிபுரா

58. இந்தியாவில் பாலின விகிதம் அதிகமுள்ள மாநிலம் எது ?

அ) கேரளா ஆ) தமிழ்நாடு இ) கர்நாடகா ஈ) மகாராஷ்டிரா

59. பொருந்தாத இணையைக் கண்டுபிடி

| **பழங்குடியின மக்கள் இடம்பெயர்வு வேளாண்மையின் பெயர்** | **மாநிலம்** |
|---|---|
| அ) ஜூம் | அசாம் |
| ஆ) பொன்னம் | கேரளா |
| இ) பொடு | ஆந்திரப்பிரதேசம் மற்றும் ஒடிசா |
| ஈ) மாசன், பீரா,பென்டா, பீவார் | மகாராஷ்டிரம் |

60. உனது தந்தை கோடை விடுமுறையின் போது துறைமுகத்திற்கு அழைத்துச் செல்வதாக உறுதியளிக்கிறார். கீழ்க்காணும் எந்த ஊருக்கு அழைத்துச்செல்வார் ?

அ) சென்னை ஆ) ஈரோடு இ) கோயம்புத்தூர் ஈ) மதுரை

* * * * *

ERODE DISTRICT